இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3117 – சிறுவர் உரிமைகள்**

**காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்**

திகதி. 03.09.2008 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

பகுதி I இலிருந்து சகல வினாக்களுக்கும் விடைதருக. பகுதி II இலிருந்து யாதாயினும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

1 "சிறுவர் உரிமைகள்" , எனும் பதத்தினை விளக்குக.

2. சிறுவர்களுக்கு பொருத்தமான "தேவை", "கடமை" எனும் எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துக.

3. சிறுவர்களுக்கு உரித்தாகக்கூடிய பங்குபற்றலுக்கான உரிமைகள் மூன்றைப் பெயரிடுக.

4. சிறுவர்கள் உயிர்வாழ்தல் மற்றும் நலனோம்பல் ஆகியவவைக்குத் தேவையான மூன்று (03) நிபந்தனைகளை குறிப்பிடுக.

5. சிறுவர் உரிமை தொடர்பான பிரதான கோட்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

6. சிறுவர் உரிமை தொடர்பாக தொடர்பாடல் துறையில் வினைத்திறனுக்கு தடையாக அமையும் காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.

7. இலங்கையின் தெருவோர சிறுவர்களின் எழுவினா(issues)களைத் தீர்ப்பதற்குத் தற்போது எடுக்கப்பட்டுள்ள நுட்பங்கள் மூன்றைப் பெயரிடுக.

8. சிறுவர் உரிமை தொடர்பாக உள்ள பிரதானமான கருவிகள் யாவை?

(8× 5= 40 புள்ளிகள்)

## பகுதி II

9 (i) சிறுவர் உரிமை தொடர்பான சாதனத்தினடிப்படையில் உயிர்வாழுவதற்குரிய உரிமை தொடர்பான அரசு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகள் இரண்டைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) பிள்ளை உயிர்வாழுவதற்குரிய உரிமை தொடர்பாக தாக்கம் செலுத்தும் தாயினதும் பிள்ளையினதும் சுகாதாரம் மற்றும் போசணை காரணிகளை ஆராய்க. (12 புள்ளிகள்)

10. (i) பிள்ளையின் மேம்பட்ட நலன் என்ற கோட்பாடு என்பதனால் கருதப்படுவது யாது? (08 புள்ளிகள்)

(ii) இக்கோட்பாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தினால் பிள்ளை பாதுகாப்பு, பாதுகாவலர் தொடர்பான எழுவினாக்(issues)களை தீர்க்கும் முறையினை உதாரணங்கள் தந்து ஆராய்க. (12 புள்ளிகள்)

11. (i) விசேட சந்தர்ப்பங்களில் பின்னடையும் பிள்ளைகள் கருதப்படுவது யார்? (08 புள்ளிகள்)

(ii) விசேட சந்தர்ப்பங்களை கடக்கும் பிள்ளைகளின் விருத்திக்கும் பொறுப்பாக உள்ள நான்கு முகவர்களைப் குறிப்பிட்டு அவர்களின் கடமைகளை விளக்குக. (12 புள்ளிகள்)

12. (i) சிறுவர் துஷ்பிரயோகம் என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் நிகழும் பிரதான வகைகள் யாவை? (07 புள்ளிகள்)

(iii) இலங்கையின் சிறுவர் துஷ்பிரயோகத்தை நீக்குவதற்கு நோக்கமாகக் கொண்ட ஒரு பாராளுமன்ற சட்டத்தினைக் குறிப்பிட்டு அதன் உள்ளடக்கத்தினை விபரிக்க. (08 புள்ளிகள்)

13. சிறுவர் உரிமை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்ததுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறனான செயற்பாட்டினைப் பின்வரும் காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை ஆராய்க.

(i) புவியியல் தொலைவு.
(ii) சமூக, பொருளாதார தொலைவு.
(iii) ஊடக வலையமைப்பிலுள்ள குறைபாடுகள்

(20 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புகளின் கீழ் ஏதேனும் இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) பாகுபாடு காட்டாமை என்ற கோட்பாடு
(ii) பிள்ளையின் சமூக விருத்தி
(iii) இலங்கையில் சிறுவர் பராமரிப்பு அதிகார சபை
(iv) எமது நாட்டின் பிரித்தானிய ஆட்சி காலமும், சிறுவர் உரிமையும்
(v) அகதிகளாக்கப்பட்ட சிறுவர்களும் அவர்களின் உரிமைகளும்.
(vi) கட்டாயக்கல்வி விதிகள்.

(10× 2= 20 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)